## நீர்வளத்துறை

விழுப்புரம், கீழ்பெண்ணையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: பொறி.பா.ஷோபனா, பி.இ.,

திருவள்ளுவராண்டு:2054 – சோபகிருது வருடம் – கார்த்திகை – 29

**செயல்முறை ஆணை எண்:1728/2023/நிஎ–1/நாள்:15.12.2023**

பொருள்: நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2022–23–ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய பணிகளுக்கானது – இளநிலை உதவியாளர்கள் பதவிக்கு தெரிவு செய்து நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிவேட்பாளர்கள்– செல்வி.இ.இலக்கியா, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி:28.12.1997) – இக்கோட்ட அலுவலகத்தில் 18.10.2023 மு.ப. முதல் பணியில் சேர்ந்துள்ளமை – அவர்தம் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவங்குதல்– ஆணை.

பார்வை:
1. சென்னை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்களின் கடித எண்.1970/PSD-D2/2023/ நாள்:31.08.2023.
2. முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சேப்பாக்கம் சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/ 35336/ 2023/ நாள்:22.09.2023.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.1728/2023/நிஎ1/ நாள்:18.10.2023.

-----------

ஆணை:–

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2022–2023–ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வில் (தொகுதி IV–ற்கானது) தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் பதவிக்கு TNPSC வரிசை எண்.45–ல் தெரிவு செய்யப்பட்ட செல்வி.இ.இலக்கியா, (பிறந்த தேதி: 28.12.1997) அவர்கள் வ.எண்.1, 2 மற்றும் 3–ல் காணும் செயல்முறை ஆணைகளின் அடிப்படையில், இக்கோட்ட அலுவலகத்தில் 18.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக மருத்துவ உடற்தகுதி சான்றினை சமர்ப்பித்து பணியில் சேர்ந்துள்ளார். வ.எண். (2)–ல் படிக்கப்பட்ட முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.வ.து., அவர்களின் மேற்குறிப்பாணை கடிதம் பத்தி எண். (5)–ல் தேர்வாளர்களின் தமிழ்வழி கல்வி தொடர்பான சான்றிதழின் உண்மை தன்மை உறுதி செய்வது குறித்து குறிப்பிட்டுள்ள 12 தெரிவாளர்களில் (TNPSC வரிசை எண்.2, 7, 8, 17, 19, 23, 24, 29, 35, 42, 48 மற்றும் 52)–ல் செல்வி.இ.இலக்கியா பெயர் இடம்பெறவில்லை.

(த.பி.பா.)





எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)–ன் பிரிவு 28–ன் படி இவரின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 18.10.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டு கால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும். மேலும் இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி IV–ன் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றத்தால் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கப்படுகிறது.

M. [signature]
செயற்பொறியாளர், நீ.வ.து.,
கீழ்பெண்ணையாறு வடிநில கோட்டம்,
விழுப்புரம்.

15/12/2023

பெறுநர்:
இ.இலக்கியா,
இளநிலை உதவியாளர், நீ.வ.து.,
கீழ்பெண்ணையாறு வடிநில கோட்டம்,
விழுப்புரம்.